# தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

CODE - DTA13

UNIT - I

1. நூன்மரபு
2. மொழி மரபு

# 1. நூன்மரபு

தொன்று தொட்டு வழங்கப்படுவது தமிழ்மொழியாகும். அம்மொழிக்கு அடிப்படையாய் அமைவது எழுத்து. தனித்தனியே நிற்கும் அவ்வெழுத்துக்களின் பல்வகை இலக்கணங்களையும் எடுத்துரைப்பதால் இம்முதலியல் **நூன்மரபு** எனப்பெயர் பெற்றது. நூல் என்பது முதலாகு பெயர். **தாமரை முகம்** என்பதில் **தாமரை** என்பது முதலைக் குறிக்காமல் சினையாகிய **மலருக்கு** ஆகி வரும். அதுபோல இங்கு **நூல்** என்பது **நூலைக்** குறிக்காமல் சினையாகிய **எழுத்துக்கு** ஆகி வந்தது. எனவே எழுத்து மரபு என்பதே ஈண்டு நூன்மரபு எனச் சுட்டப்படுகிறது. எழுத்ததிகாரம் என்பதில் இடம்பெற்ற எழுத்து என்னும் சொல் மீண்டும் எழுத்து மரபு என இயலாக வருவதைத் தவிர்க்கக் கருதித் தொல்காப்பியர் இவ்வியலுக்கு நூன்மரபு எனப் பெயரிட்டார் போலும். இவ்வியல் கூறும் செய்திகளை உள்ளடக்கிய இயலுக்கு நன்னூலார் எழுத்தியல் எனப்பெயர் தந்திருப்பதும் ஒப்பு நோக்கத் தக்கது. நூல்+மரபு என்பது மெல்லெழுத்து இயையின் னகாரம் ஆகும் (நூ.368) என்னும் விதிப்படி நூன்மரபு ஆயிற்று.

நூன்மரபில் அமைந்த நூற்பாக்கள் **33.** இந்நூற்பாக்கள் கூறும் செய்திகளை எழுத்துக்களின் 1.தொகை வகை (எண்) 2.பெயர் 3.மாத்திரை அளவு 4.வடிவு 5.மெய்ம்மயக்கம் என்னும் ஐந்து பிரிவுகளாகப் பாகுபடுத்தலாம்.

**எழுத்துக்களின் பெயரும் தொகையும் (முதல்=30+சார்பு=3→33)**

1. **எழுத்(து)எனப் படுவ**
**அகரமுதல் னகர இறுவாய்**
**முப்பஃ(து) என்ப;[1]**
**சார்ந்துவரல் மரபின் மூன்(று)அலங் கடையே [2].**

**[இ-ள்]** *1.* அகரம் முதல் னகரத்தை இறுதியாக உடைய எழுத்துக்கள் முப்பது. இவையே ஆசிரியரால் எழுத்து என்று சிறப்பித்துச் சொல்லப்படுவனவாகும் 2.இவற்றைச் சார்ந்து வருகின்ற இலக்கணத்தை உடைய மூன்று எழுத்துக்களும் அல்லாதவிடத்து முப்பது என்னும் எண்ணிக்கையைப் பெறும். (அம்மூன்றுடன் கூட்டத் தமிழ் எழுத்துக்கள் முப்பத்து மூன்றாகும்.)

## விளக்கம்

சார்ந்துவரல் மரபு என்னும் குறிப்பால் அகரம் முதலான எழுத்துக்கள் முப்பதும் சாராத மரபாம். அதாவது முதலெழுத்துக்கள் என்பது தொல்காப்பியரின் கருத்து. சார்ந்துவரல் என்பதனைப் பிற்காலத்தார் சார்பெழுத்து எனக் குறியீடு செய்தனர். சாராத மரபை முதலெழுத்து என்னும் சொல்லால் குறித்தனர். அகரம் முதல் ஔகாரம் ஈறாகிய பன்னிரண்டும் உயிரெழுத்துக்கள். க் முதல் ன் ஈறாகிய பதினெட்டும் மெய்யெழுத்துக்கள். இவ்விரண்டையும் கூட்ட எழுத்துக்கள் முப்பதாகும். **(1)**

### சார்பெழுத்துக்கள் (3)

2. **அவைதாம்**
**குற்றிய லிகரம்[1] குற்றிய லுகரம்[2]**
**ஆய்தம்[3] என்ற**
**முப்பாற் புள்ளியும் எழுத்தோர் அன்ன.**

**[இ-ள்]** சார்ந்து வரும் மரபினை உடைய எழுத்துக்கள் மூன்று. அவை *1.குற்றியலிகரம் 2.குற்றியலுகரம் 3.மூன்று புள்ளியினை உடைய ஆய்தம் என்னும் பெயர்களையுடையவை ஆகும்.* இம்மூன்றும் முன்னர்ச் சொல்லப்பட்ட முப்பது (முதல்) எழுத்துக்களை ஒத்த தன்மை உடையனவாம்.

## விளக்கம்

தொல்காப்பியர் சார்பெழுத்துக்களை மூன்று எனக் காட்டுகிறார். பின் வந்த நன்னூலார் பத்தாக்கி விளக்குகிறார். ஆய்தம் தொல்காப்பியர் காலத்தில் மூன்று புள்ளிகளாகவே (∴) எழுதப்பட்டது. பிற்காலத்தில் நடுவுவாங்கியிட்டு (சுழித்து - ஃ) எழுதப்படுவதாக நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார். **(2)**

### குற்றெழுத்துக்களும் (5) மாத்திரை அளபும் (1)

3. **அவற்றுள்**
**அ[1] இ[2] உ[3]**
**எ[4] ஒ[5] என்னும் அப்பால் ஐந்தும்**
**ஓர்அளபு இசைக்கும் குற்றெழுத்(து) என்ப.**

**[இ-ள்]** முதலெழுத்துக்கள் எனக் கூறப்பட்டனவை முப்பது. அவற்றுள் *1.அ 2.இ 3.உ 4.எ 5.ஒ* என்னும் எழுத்துக்கள் ஐந்து. அவை ஒவ்வொன்றும் ஒரு மாத்திரை அளவினதாய் ஒலிக்கின்ற குற்றெழுத்துக்களாகும் என்று கூறுவர் புலவர். **(3)**

## நெட்டெழுத்துக்களும் (7) மாத்திரை அளபும் (2)

4. **ஆ[1] ஈ[2] ஊ[3] ஏ[4] ஐ[5]**
**ஓ[6] ஔ[7] என்னும் அப்பால் ஏழும்**
**ஈர்அளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப.**

[இ-ள்] 1.ஆ 2.ஈ 3.ஊ 4.ஏ 5.ஐ 6.ஓ 7.ஔ என்று சொல்லப்படுகின்ற எழுத்துக்கள் ஏழாகும். அவை ஒவ்வொன்றும் இரண்டு மாத்திரை அளவினதாக ஒலிக்கும் நெட்டெழுத்துக்கள் என்று சொல்லுவர் புலவர். **(4)**

## தனி எழுத்திற்கு ஒலி வரையறை

5. **மூவளபு இசைத்தல் ஓர்எழுத்(து) இன்றே.**

[இ-ள்] தனித்து நின்று மூன்று மாத்திரையாய் ஒலிக்கும் எழுத்து தமிழில் இல்லை.

### விளக்கம்

இதிலிருந்து ஒன்றுக்கும் மேற்பட்ட எழுத்துக்கள் கூடி மூன்று மாத்திரையாகவும் நான்கு மாத்திரையாகவும் ஒலிக்கும் என்பது பெறப்படுகிறது. **(5)**

## உயிரளபெடை

6. **நீட்டம் வேண்டின் அவ்வள(பு) உடைய**
**கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்.**

[இ-ள்] இரண்டு மாத்திரைக்கு மேல் எழுத்துக்களை நீட்டி ஒலிக்க வேண்டிய சூழலும் ஏற்படும். அவ்விடங்களில் நெட்டெழுத்துக் களுக்கு இனமான குற்றெழுத்துக்களைச் சேர்த்து (ஓரெழுத்தாகக் கூட்டி) ஒலிக்க வேண்டும் என்று சொல்லுவர் புலவர்.

### விளக்கம்

மாத்திரைக்கு ஏற்ப நெட்டெழுத்துக்களின் பின் குற்றெழுத்துக்களைச் சேர்த்து எழுத வேண்டும்.

ஆஅ, ஈஇ, ஊஉ → மூன்று மாத்திரை
செறாஅஅய், வாஅஅழ்க → நான்கு மாத்திரை

இவ்வாறு அளபெடையாகக் கூறும்போது குறில், நெடில் எழுத்துக்களைத் தனியே பிரித்து ஒலிக்கக் கூடாது. அளபெடை பற்றிய இந்நூற்பாவில் எழூஉதல் என அளபெடை அமைய நூற்பா செய்த தொல்காப்பியரின் அறிவுத்திறன் எண்ணி மகிழத் தக்கது. **(6)**

## மாத்திரைக்குரிய அளபு

7. **கண்இமை[1] நொடி[2]என அவ்வே மாத்திரை**
**நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே.**

**[இ-ள்]** *1.* இயல்பாகக் கண்ணை இமைப்பதற்கும் 2.கைவிரலை நொடிப்பதற்கும் ஆகின்ற கால அளவு மாத்திரை எனப்படும். இதுவே எழுத்தொலியின் இலக்கணத்தை நுணுக்கமாக உணர்ந்தோர் கண்டு கூறிய நெறியாகும்.

### விளக்கம்

கண்இமைத்தல் என்பது தொழிலுக்கும் கைந்நொடித்தல் என்பது ஓசைக்கும் ஆகி நின்றன. மாத்திரை என்பதற்குக் கண்ணிமை, கைந்நொடி என்பவற்றின் அளவு ஒப்பிட்டுக் காட்டப்படுவதால் இது சார்த்திஅளத்தல் என்னும் அளவை வகையுள் அடங்கும். **(7)**

## உயிரெழுத்துக்களின் தொகை (12)

8. **ஔகார இறுவாய்ப்**
**பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப.**

**[இ-ள்]** ஔகாரத்தை இறுதியாக உடைய எழுத்துக்கள் பன்னிரண்டு. அவற்றை உயிரெழுத்துக்கள் என்று சான்றோர் கூறுவர்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ → உயிரெழுத்துக்கள்.

இவை பதினெட்டு மெய்யெழுத்துக்களையும் இயக்கும் தன்மை கொண்டவை. ஆதலின் இவ்வெழுத்துக்கள் பன்னிரண்டும் உயிரெழுத்துக்கள் எனப்பெயர் பெற்றன. இவற்றை **உயிர்க்கணம்** என்றும் கூறுவர். **(8)**

## மெய்யெழுத்துக்களின் தொகை (18)

9. **னகார இறுவாய்ப்**
**பதினெண் எழுத்தும் மெய்என மொழிப.**

**[இ-ள்]** னகரத்தை இறுதியாக உடைய எழுத்துக்கள் பதினெட்டு. அவற்றை முன்னோர் மெய்யெழுத்துக்கள் என்று குறிப்பிடுவர்.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப்,
ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் } மெய்யெழுத்துக்கள்

இவை பன்னிரண்டு உயிர்களுக்கும் இடம் கொடுத்து அவற்றால் இயங்கும் தன்மை கொண்டவை. அதனால் இவ்வெழுத்துக்கள் உடம்பு அல்லது மெய் எனப் பெயர் பெற்றன. உயிர், மெய் என்னும் பெயர்கள் உவம ஆகுபெயர்களாகும். **(9)**

## உயிர்மெய்க்குரிய மாத்திரை அளவு

10. **மெய்யோடு இயையினும் உயிர்இயல் திரியா.**

[இ-ள்] பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் பதினெட்டு மெய்யெழுத்துக்களுடன் சேர்ந்து உயிர்மெய்யாய் மாற்றம் அடையும். அவ்விடத்து வடிவமும் ஒலியும் வேறுபடும். அந்நிலையிலும் உயிரெழுத்து குறில், நெடில் என்னும் தன்மையிலிருந்து மாறுபடுவதில்லை. [எ-டு]

அ → குறில் (1 மாத்திரை)
ஆ → நெடில் (2 மாத்திரை)
க் + அ - க → உயிர்மெய்க் குறில் (1 மாத்திரை)
க் + ஆ - கா → உயிர்மெய் நெடில் (2 மாத்திரை) (10)

## தனி மெய்க்குரிய மாத்திரை (½)

11. **மெய்யின் அளபே அரைஎன மொழிப.**

[இ-ள்] பதினெட்டு என வரையறுக்கப்பட்டவை மெய்யெழுத்துக் களாகும். அவை ஒவ்வொன்றும் அரை மாத்திரை அளவினதாய் ஒலிக்கும் என்று சொல்லுவர் புலவர். [எ-டு]

காக்கை, வேங்கை
க் முதல் ன் வரை → ½ மாத்திரை (11)

## சார்பெழுத்துக்களுக்குரிய மாத்திரை (½)

12. **அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே.**

[இ-ள்] முன்னர்க் கூறப்பட்ட (நூ.2) சார்பெழுத்துக்கள் மூன்றாகும். அவை அனைத்தும் மேற்கூறப்பட்ட மெய்யெழுத்துக்களைப் போல அரை மாத்திரை அளவினதாக ஒலிக்கும். [எ-டு]

| | | | |
|---|---|---|---|
| கேண்மியா | - | குற்றியலிகரம் | ½ மாத்திரை |
| நாகு | - | குற்றியலுகரம் | ½ மாத்திரை |
| எஃகு | - | ஆய்தம் | ½ மாத்திரை |

(12)

## மகரக் குறுக்கத்திற்குரிய மாத்திரை (¼)

13. **அரைஅளபு குறுகல் மகரம் உடைத்தே
இசைஇடன் அருகும் தெரியும் காலை.**

[இ-ள்] மெய்யெழுத்துக்களுள் ஒன்றாகிய மகரம் அரை மாத்திரை அளவினதாய் ஒலிக்கும். அது வேறோர் எழுத்தினது சார்பால் தனக்குரிய ஒலிப்பு அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரையாகும்.

ஆராய்ந்து பார்க்குமிடத்து இக்குறுக்கம் சில இடங்களில் மட்டுமே வரும். [எ-டு]

போலும் - போன்ம் → ஒருமொழிக்கண் வந்த மகரக்குறுக்கம்

வரும் வண்ணக்கண் → புணர்மொழிக்கண் வந்த மகரக்குறுக்கம் **(13)**

**மகரக் குறுக்கத்தின் வடிவம் ( ம்)**

**14. உட்பெறு புள்ளி உருவுஆ கும்மே.**

[இ-ள்] மகரம் வெளியில் பெறும் புள்ளியோடு எழுத்தின் உள்ளேயும் ஒரு புள்ளியைப் பெறும். இதுவே மகரக் குறுக்கத்திற்குரிய வடிவமாகும். [எ-டு]

ம் - மகரம்

ம் - மகரக்குறுக்கம்

**விளக்கம்**

பகர மெய்யின் உள்ளே ஒரு புள்ளியிட்டு (ப்) அதனை மகரக்குறுக்கம் எனப் பலரும் கூறுகின்றனர். இது பொருத்தமற்றது. மகரமெய் கால் மாத்திரையாக ஒலிப்பதைக் காட்டுவதற்கு அம்மகரமெய்யின் உள்ளே ஒரு புள்ளியை இட்டனர். இதுவே உட்பெறு புள்ளியாகும். **(14)**

**மெய்யெழுத்தின் தன்மை**

**15. மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையல்.**

[இ-ள்] மெய்யெழுத்துக்கள் வரிவடிவில் புள்ளியிட்டு எழுதப்பெறும் இயல்புடையன. [எ-டு]

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்

இதிலிருந்து புள்ளியில்லாத எழுத்துக்கள் அகரத்துடன் கூடிய உயிர்மெய்யெழுத்துக்கள் என்பது பெறப்படுகிறது.

க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன. **(15)**

**எகர, ஒகரத்தின் வடிவம்**

**16. எகர ஒகரத்து இயற்கையும் அற்றே.**

[இ-ள்] மெய்யெழுத்துக்களைப் போல எகர உயிரும் (எ) ஒகர உயிரும் (ஒ) தனக்கு மேல் ஒரு புள்ளியைப் பெறும் இயல்பினை உடையனவாகும். [எ-டு]

எ், ஒ்

**விளக்கம்**

எ, ஒ என்னும் எழுத்துக்கள் முற்காலத்தில் புள்ளி வைத்துக் குறிலாக அடையாளம் காட்டப்பட்டன. புள்ளியில்லா எழுத்துக்கள்

நெட்டெழுத்துக்களாகும். எ ஒ ...ன்னும் எழுத்தின் கீழ்ப்பகுதி நீட்டப்பட்டும் (ஏ) ஒகரத்தின் கீழ்ப ...பகுதி சுழிக்கப்பட்டும் (ஓ) நெட்டெழுத்துக்களாக ஆக்கப்பட்டன ... இவற்றை வீரமாமுனிவர் நீட்டல், சுழித்தல் (தொன்னூல் வி... ...க்கம் - நூ.12) எனக் குறிப்பிடுகிறார். (16)

## உயிர்மெய் எழுத்துக்களின் வரிவடிவம்

17. **புள்ளி இல்லா எல்லா மெய்யும்**
**உருவுஉருவு ஆகி அகரமோ(டு) உயிர்த்த...லும்[1]**
**ஏனை உயிரோடு உருவுதிரிந்(து) உயிர்த்...லும்[2]**
**ஆஈர் இயல உயிர்த்தல் ஆறே.**

**[இ-ள்]** பதினெட்டு மெய்யெழுத்துக்களும் ... பன்னிரண்டு உயிரெழுத்துக்களுடன் கூடி உயிர்மெய்யா...க மாறும். ...சேரும் போது 1.மெய்யெழுத்துக்கள் அனைத்தும் அகரத்தோடு ... ...ாது வடிவம் புள்ளியை இழக்கும் 2. பிற உயிர்களோடு சேரும் போ... ...ழுத்துக்கள் மாறும். இவ்விரண்டு முறையிலும் உயிர்மெய்யெ... வெளிப்பட்டுத் தோன்றும். **[எ-டு]**

1. புள்ளி இழத்தல் (மெய்கள் அகரத்தோடு கூ...டுதல்)
   க் + அ → க ... ன் + அ → ன

2. வடிவம் மாறுதல்
   அ) மேல் விலங்கு பெறுதல் (இகரம், ஈகாரம்)
   க் + இ → கி ; க் + ஈ → கீ
   ஆ) கீழ் விலங்கு பெறுதல் (உகரம், ஊகாரம்)
   க் + உ → கு; க் + ஊ → கூ
   இ) கோடு பெறுதல் (எகரம், ஏகாரம்)
   க் + எ → கெ ; க் + ஏ → கே

கோடு என்பதைத் தற்காலத்தில் கொம்பு எனக் கூறுவர். குறிலுக்குரிய குறியை ஒற்றைக் கொம்பு (ெ) என்றும் நெடிலுக்குரிய குறியை இரட்டைக் கொம்பு (ே) என்றும் வழங்குகின்றனர்.

(ஈ) புள்ளி பெறுதல் (ஆகாரம்)

க் + ஆ → க•

அருகில் எழுதிய புள்ளியைப் பிற்காலத்தார் காலாக (ா) எழுதுகின்றனர். இது துணைக்கால் என்றும் கூறப்படும்.

(உ) புள்ளியும் கோடும் பெறுதல் (ஒகரம், ஓகாரம்)

க் + ஒ → கெ• (கொ)

க் + ஓ → கே• (கோ)

**விளக்கம்**

இந்நூற்பாவிற்கு உரை எழுதியோர் ஐகார, ஔகாரங்களோடு மெய்யெழுத்துக்கள் கூடும் வடிவ மாற்றத்தைப் பற்றி எக்கருத்தும் தெரிவிக்கவில்லை. மெய்யெழுத்துக்கள் ஐகாரத்தோடு கூடிக் கை.....னை என்று ஒலிக்கும். இவற்றுள் முன்னுள்ள எழுத்தை (ை) அறுவகை இலக்கண ஆசிரியர் தண்டபாணி சுவாமிகள் இணைக்கொம்பு (நூ.18) என்னும் சொல்லால் குறிப்பிடுகிறார்.

மெய்யெழுத்துக்கள் ஔகாரத்தோடு கூடி நிற்கக் கௌ.........னௌ என்றாகும். இவ்வெழுத்துக்களில் ஒற்றைக் கொம்போடு இறுதியில் நிற்கும் ள என்னும் குறியைத் தண்டபாணி சுவாமிகள் ஔகாரத்தின் இரண்டாம் எழுத்து (நூ.18) என்று கூறுகிறார். ஆனால் ஐகாரத்திற்குரிய குறியைப் (ை) **படுகைச்சுழி** என்றும் ஔகாரத்திற்குரிய குறியைக் (ள) **கொம்புக்கால்** என்றும் கூறுவது பொருத்தமுடையது. ஐகார உயிர்மெய்யைக் காட்ட இரண்டு கொம்புகளிட்டு (ெெ) எழுதினர். அவை பின்னர்த் திரிபடைந்து (ெெ → ை) ை என்றாகியது. ஔகார உயிர்மெய்களுக்கு ஒரு கொம்பும் (ெ) ஒரு காலும் (ா) இட்டு எழுதினர். அவை பின்னர் (ொ → ௗ ) ள என மாற்றம் அடைந்தது. **(17)**

**உயிர்மெய் ஒலிக்கும் முறை**

**18. மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே.**

**[இ-ள்]** உயிரும் மெய்யும் கூடி உயிர்மெய்யெழுத்தாய் ஒலிக்கும். அந்நிலையில் மெய்யெழுத்தினது ஓசை முன்னரும் உயிரெழுத்தினது ஓசை பின்னரும் தோன்றும்.

க → க் + அ; ங → ங் + அ. **(18)**

**வல்லின எழுத்துக்கள் (6)**

**19. வல்லெழுத்து என்பு க[1] ச[2] ட[3] த[4] ப[5] ற[6].**

**[இ-ள்]** முற்கூறப்பட்ட (நூ. 9) பதினெட்டு மெய்யெழுத்துக்களுள் 1.க் 2.ச் 3.ட் 4.த் 5.ப் 6.ற் என்னும் ஆறும் வன்மையான ஓசை பெற்று ஒலிக்கின்ற எழுத்துக்களாகும்.

**விளக்கம்**

வல்லென்று இசைத்தல், தலையில் நிலைபெற்ற காற்றை இடமாகக் கொண்டு பிறத்தல் ஆகியவற்றால் இவ்வெழுத்துக்கள் வல்லெழுத்துக்கள் என்று பெயர் பெற்றன. இவற்றை **வன்கணம்** என்றும் கூறுவர். **(19)**

## மெல்லின எழுத்துக்கள் (6)

**20. மெல்லெழுத்து என்ப ங[1] ஞ[2] ண[3] ந[4] ம[5] ன[6].**

**[இ-ள்]** *1.*ங் *2.*ஞ் *3.*ண் *4.*ந் *5.*ம் *6.*ன் என்னும் ஆறும் மென்மையான ஓசை பெற்று ஒலிக்கின்ற எழுத்துக்களாகும்.

### விளக்கம்

மெல்லென்று இசைத்தல், மூக்கில் நிலைபெற்ற காற்றின் இடமாகப் பிறத்தல் ஆகியவற்றால் இவ்வெழுத்துக்கள் மெல்லெழுத்துக்கள் எனப்பட்டன. இவற்றை **மென்கணம்** என்றும் சுட்டுவர். **(20)**

## இடையின எழுத்துக்கள் (6)

**21. இடையெழுத்து என்ப ய[1] ர[2] ல[3] வ[4] ழ[5] ள[6].**

**[இ-ள்]** *1.*ய் *2.*ர் *3.*ல் *4.*வ் *5.*ழ் *6.*ள் என்னும் ஆறும் இடைப்பட்ட ஓசையைப் பெற்று ஒலிக்கின்ற எழுத்துக்களாகும்.

### விளக்கம்

வன்மை, மென்மை என்னும் இரண்டுக்கும் நடுவாய் ஒலித்தல், மிடற்றில் இடம்பெற்ற காற்றால் பிறத்தல் ஆகியவற்றால் இவ்வெழுத்துக்கள் **இடையெழுத்துக்கள்** ஆயின. இவற்றை **இடைக்கணம்** என்றும் அழைப்பர். **(21)**

## மெய்ம்மயக்க வகைகள் (2)

**22. அம்மூ ஆறும் வழங்கியல் மருங்கின்**
**மெய்ம்மயங்கு[1] உடனிலை[2] தெரியும் காலை.**

**[இ-ள்]** வல்லினம், மெல்லினம், இடையினம் என்று பகுத்துக் கூறப்பட்ட மெய்யெழுத்துக்கள் பதினெட்டு. அவை அனைத்தும் மொழியில் இடம்பெறும். ஆராய்ந்து பார்க்கின்ற போது அவ்வெழுத்துக்கள் **1.** வேற்றுநிலை மெய்ம்மயக்கம் **2.** உடனிலை மெய்ம்மயக்கம் என இருவகைப்படும். **[எ-டு]** சேர்தல், காக்கை.

### விளக்கம்

ஒரு மெய்யெழுத்துப் பிற மெய்யெழுத்துக்களோடு சேர்ந்து நிற்பது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் ஆகும். **[எ-டு]** சேர்தல், நண்பன், திங்கள். ஒரு மெய்யெழுத்துத் தன்னோடு தானே நிற்பது உடனிலை மெய்ம்மயக்கமாகும். **[எ-டு]** காக்கை, பச்சை, வெம்மை.

ஒரு மெய்யெழுத்து வெளிப்பட்டு நிற்க அதனை அடுத்து ஓர் உயிர்மெய் நிற்கும். அவ்உயிர்மெய் எழுத்தை மெய், உயிராகப் பிரித்துப் பார்க்க வேண்டும். அவ்வெழுத்து முன்நின்ற எழுத்திற்கு வேறாக நிற்பின் அது **வேற்றுநிலை மெய்ம்மயக்கம்** என்று கூறப்படும்.

சேர்தல் - சேர் + த் + அல்

இதில் ரகர ஒற்றை (ர்) அடுத்துத் தகர ஒற்று (த்) நின்றதால் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாயிற்று. ஒத்த எழுத்தாக இருப்பின் உடனிலை மெய்ம்மயக்கம் என்று அழைக்கப்படும்.

காக்கை - கா + க் + க் + ஐ

இதில் ககர ஒற்றை (க்) அடுத்து அதே எழுத்தாகிய ககர ஒற்று (க்) நின்றதால் உடனிலை மெய்ம்மயக்கம் ஆயிற்று. **(22)**

### வல்லின, இடையின மெய்ம்மயக்கம்

**23. ட[1]ற[2]ல[3]ள[4] என்னும் புள்ளி முன்னர்க்
கசப என்னும் மூஎழுத்து உரிய.**

**[இ-ள்]** *1.ட் 2.ற் 3.ல் 4.ள் என்னும் நான்கு எழுத்துக்களை அடுத்து க், ச், ப் என்னும் மூன்று மெய்யெழுத்துக்கள் வரும்.* **[எ-டு]**

ட் → கேட்கும், கட்சி, திட்பம்

ற் → கற்கண்டு, முயற்சி, கற்பு

ல் → செல்க, வல்சி, செல்பவர்

ள் → கொள்க, நீள்சினை, கொள்பவர் **(23)**

### இடையினத்திற்குச் சிறப்பு விதி

**24. அவற்றுள்
ல[1]ள[2]ஃகான் முன்னர் யவவும் தோன்றும்.**

**[இ-ள்]** மேற்கூறப்பட்ட நான்கு எழுத்துக்களுள் 1. லகர 2.ளகரமாகிய மெய்களை அடுத்து யகர, வகர மெய்களும் வரும். **[எ-டு]**

ல் → கொல்யானை, செல்வம்

ள் → நள்யாமம், கள்வன் **(24)**

### மெல்லின மெய்ம்மயக்கம்

**25. ங[1]ஞ[2]ண[3] ந[4]ம[5]ன[6] எனும்புள்ளி முன்னர்த்
தத்தம் மிசைகள் ஒத்தன நிலையே.**

**[இ-ள்]** *1.ங் 2.ஞ் 3.ண் 4.ந் 5.ம் 6.ன் என்னும் ஆறும் மெல்லின எழுத்துக்களாகும். அவ்வாறனையும் அடுத்து அவற்றின் இனமாகிய க், ச், ட், த், ப், ற் என்னும் வல்லெழுத்துக்கள் ஆறும் வரும்.* **[எ-டு].**

தெங்கு, மஞ்சள், கொண்டல், பந்து, கொம்பு, மன்றம். **(25)**

## மெல்லினத்திற்குச் சிறப்பு விதி

26. **அவற்றுள்**
**ண[1]ன[2]ஃகான் முன்னர்க்**
**க ச ஞ ப ம ய வ ஏழும் உரிய.**

[இ-ள்] மேற்கூறப்பட்ட ஆறு மெல்லெழுத்துக்களுள் *1.*ண் *2.*ன் என்பவற்றிற்கு முற்கூறப்பட்ட (நூ.*25*) டகார, றகாரமாகிய வல்லெழுத்தும் வரும். அவற்றுடன் க், ச், ஞ், ப், ம், ய், வ் என்னும் ஏழ் எழுத்துக்களும் அடுத்து நிற்கும். [எ-டு]

ண் → வெண்குடை, வெண்சாந்து, வெண்ஞாண், பண்பு, வெண்மை, மண்யாறு, மண்வெட்டி.

ன் → நான்கு, நன்செய், மென்ஞாண், அன்பு, மென்மை, இன்யாழ், பொன்வலிது. *(26)*

## மெல், இடை எழுத்துக்களுக்குச் சிறப்பு விதி

27. **ஞ[1] ந[2] ம[3] வ[4] என்னும் புள்ளி முன்னர்**
**யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே.**

[இ-ள்] *1.*ஞ் *2.*ந் *3.*ம் *4.*வ் என்று சொல்லப்படும் மெய்யெழுத்துக்களை அடுத்து யகரமெய் நிற்கும் பொருண்மை உடையதாகும். [எ-டு]

உரிஞ்யாது, பொருந்யாது, திரும்யாது, தெவ்யாது. *(27)*

## மகர மெய்க்குச் சிறப்பு விதி

28. **மஃகான் புள்ளிமுன் வவ்வும் தோன்றும்.**

[இ-ள்] மகர மெய்யெழுத்தினை அடுத்து வகர மெய்யெழுத்துப் பொருந்தி நிற்கும். [எ-டு]

வரும்வண்ணக்கண், வலம்வருதல்

### விளக்கம்

மேல் நூற்பாக்களில் மகரத்தை அடுத்துப் பகரமும் (நூ. *25*) யகரமும் (நூ. *27*) வருமெனக் கூறப்பட்டது. அவற்றுடன் வகரமும் தோன்றும் என்பது இந்நூற்பா வழி அறியப்படுகிறது. *(28)*

## இடையின எழுத்துக்களுக்குச் சிறப்பு விதி

29. **ய[1]ர[2]ழ[3] என்னும் புள்ளி முன்னர்**
**முதலாகு எழுத்து ஙகரமொடு தோன்றும்.**

[இ-ள்] *1.*ய் *2.*ர் *3.*ழ் என்னும் மெய்யெழுத்துக்களை அடுத்து மொழிக்கு முதலில் வருகின்ற ஒன்பது மெய்யெழுத்துக்களும் வரும். அவற்றுடன்

மொழிக்கு முதலில் வராத ஙகரமும் வரும். மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களாவன: க, ச, த, ப, ஞ, ந, ம, ய, வ என்னும் ஒன்பதுமாகும். [எ-டு]

ய் → ஆய்க, காய்சினம், காய்தல், தாய்பலி, காய்ஞாயிறு,
மொய்நாள், தாய்மண், பேய்யாது, காய்வண்டி, வேய்ஙனம்.

ர் → கார்காலம், கூர்சில், கூர்தல், சார்பு, வேர்ஞான்றது,
வேர்நீண்டது, வேர்மண், வேர்யாது, வேர்வலிது, வேர்ஙனம்.

ழ் → தாழ்குரல், பாழ்சிலை, தாழ்தல், வாழ்பயிர், வீழ்ஞான்றது,
வீழ்நன்று, வாழ்மலை, வீழ்யாது, ஊழ்வினை, வீழ்ஙனம். (29)

## உடனிலை மெய்ம்மயக்கம்

**30. மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்**
**தம்முன்தாம் வரூஉம் ரழஅலங் கடையே.**

[இ-ள்] சொற்களின் உண்மை இயல்பினை ஆராய்ந்து பார்த்தால் எல்லா எழுத்துக்களும் தம்முன்னே தாம் வந்து உடனிலை மெய்ம்மயக்கமாகப் பொருந்தி நிற்கும். ஆயினும் ரகார, ழகாரங்கள் மட்டும் தம்மோடு தாம் மயங்கி வருவதில்லை. [எ-டு]

காக்கை, அங்ஙனம், பச்சை, மஞ்ஞை, பட்டை, கிண்ணம்
நத்தை, வெந்நீர், அப்பா, அம்மா, அய்யா, மல்லிகை,
கொவ்வை, பள்ளி, வற்றல், அன்னம்.

ர், ழ் என்னும் இரண்டைத் தவிர எஞ்சிய பதினாறு மெய்யெழுத்துக்களும் உடனிலை மெய்ம்மயக்கமாக வரும். (30)

## சுட்டெழுத்துக்கள் (3)

**31. அ[1]இ[2] உ[3]அம் மூன்றும் சுட்டு.**

[இ-ள்] ஒரு மாத்திரை அளவினதாக ஒலிக்கும் என்று கூறப்பட்ட குற்றெழுத்துக்கள் ஐந்து. அவற்றுள் 1.அ 2.இ 3.உ என்பன மூன்றும் சுட்டெழுத்துக்களாகும். [எ-டு]

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம்.

## விளக்கம்

சுட்டெழுத்துக்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குப் பயன்படுவனவாம். இச்சுட்டு 1.அகச்சுட்டு 2.புறச்சுட்டு என இருவகைப்படும்.

அவன் → சொல்லை விட்டுப் பிரியாமல் சுட்டுப் பொருள் உணர்த்தியதால் அகச்சுட்டு.

அவ்வீடு → சொல்லுக்குப் புறமாக நின்று சுட்டியதால் புறச்சுட்டு. (அ+வீடு)

காலத்தையும் இடத்தையும் அடிப்படையாகக் கொண்டு 1.சேய்மைச் சுட்டு 2. அண்மைச் சுட்டு 3. இடைமைச் சுட்டு எனச் சுட்டு மூவகைப்படும்.

அன்று → அங்கு → சேய்மைச் சுட்டு
இன்று → இங்கு → அண்மைச் சுட்டு
- → உங்கு → இடைமைச் சுட்டு

*(31)*

**வினா எழுத்துக்கள் (3)**

**32. ஆ[1]ஏ[2] ஓ[3]அம் மூன்றும் வினாஅ.**

[இ-ள்] இரண்டு மாத்திரை அளவினதாக ஒலிக்கும் என்று கூறப்பட்ட நெட்டெழுத்துக்கள் ஏழாகும். அவற்றுள் 1.ஆ 2.ஏ 3.ஓ என்னும் மூன்றும் ஒன்றை வினவுதல் பொருட்டு வரும் வினா எழுத்துக்களாகும். [எ-டு]

அவனா, மெய்தானே, வருவானோ

**விளக்கம்**

ஆ, ஏ, ஓ என்னும் இம்மூன்றும் எழுத்தாகிய நிலையில் நின்று வினாப்பொருளைத் தரும். எ, யா என்னும் எழுத்துக்கள் எவன், யாவன் என்பன போல மொழிநிலையில் நின்று வினாப் பொருண்மையைத் தரும்.

*(32)*

**இசையில் எழுத்துக்கள் அளபு நீண்டொலித்தல்**

**33. அளபுஇறந்து உயிர்த்தலும்[1] ஒற்றுஇசை நீடலும்[2]**
**உளஎன மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்.**

[இ-ள்] 1. உயிரெழுத்துக்கள் தமக்குக் கூறிய மாத்திரை அளவினைக் கடந்தும் ஒலிக்கும் 2.ஒற்றெழுத்துக்கள் தமக்குக் கூறிய அரை மாத்திரையை விட நீண்டும் இசைக்கும். இந்நிலை இசையுடன் கூடிய நரம்பினை உடைய யாழிசை நூலின்கண் பொருந்தி வரும் என்று சொல்லுவர் புலவர்.

**விளக்கம்**

கலைஞர்கள் இசைக்கருவிகளைப் பின்புலமாக வைத்து வெண்பா முதலான பாக்களை ஓசை புலப்படப் பாடுவர். அவ்விடங்களில் எழுத்துக்கள் தத்தமக்குரிய மாத்திரைகளைக் கடந்து ஒலிக்கும். [எ-டு]

வருவர்கொள் வயங்கிழாஅய் வலிப்பல் யான் → உயிரளபெடை
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் → ஒற்றளபெடை

*(33)*

# 2. மொழிமரபு

நூன்மரபில் கூறப்படுகின்ற எழுத்துக்களால் உண்டாவது மொழியாகும். மொழி, சொல், கிளவி, வார்த்தை, பதம் என்பன ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களாகும். பழங்காலந் தொட்டு வழங்கி வரும் தனிமொழிகளையும் அவற்றின் இடையில் நிற்கும் எழுத்துக்களின் மரபையும் வகைப்படுத்திக் கூறுவது மொழிமரபு ஆகும். இவ்வியல் **49** நூற்பாக்களைக் கொண்டது.

மொழிமரபு கூறும் செய்திகளை 1. நூன்மரபின் ஒழிபாக மொழிமரபில் கூறப்படும் சார்பெழுத்துக்கள் 2.மொழிகளின் வகைகள் 3.எழுத்துக்களின் இயக்கம் 4.போலி எழுத்துக்கள் 5.மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் 6.மொழிக்கு இறுதியாகும் எழுத்துக்கள் என்னும் ஆறாகப் பாகுபடுத்தலாம்.

## தனிமொழிக் குற்றியலிகரம்

34. **குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்**
**யாஎன் சினைமிசை உரையசைக் கிளவிக்கு**
**ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே.**

**[இ-ள்]** உரையாடலில் முன்னிலைச் சொல்லோடு சேர்ந்து வருவது மியா என்னும் அசைச்சொல்லாகும். அச்சொல்லில் இடம்பெற்ற யா என்னும் உறுப்பாகிய எழுத்திற்கு முன் உள்ள மகரத்தின் மீது இகரம் (மி) ஏறி வரும். அவ்இகரம் 1 மாத்திரையாக ஒலிக்காமல் ½ மாத்திரை அளவினதாக ஒலிக்கும் தன்மை கொண்ட குற்றியலிகரம் ஆகும். **[எ-டு]**

கேண்மியா, சென்மியா

மியா என்கின்ற அசையாகிய தனிச்சொல்லில் வருவதால் இவ்இகரம் (மி) தனிமொழிக்கண் வரும் குற்றியலிகரம் ஆகும். **(1)**

## புணர்மொழிக் குற்றியலிகரம்

35. **புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே**
**உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்.**

**[இ-ள்]** சொற்கள் ஒன்றோடு ஒன்று புணரும் போது அவ்விடத்தில் தோன்றும் இகரம் குறுகி ஒலிக்கும். அதற்குரிய விதியானது பின்னர்க் (குற்றியலுகரப் புணரியல் - நூ. 411) கூறப்படும். **[எ-டு]**

நாகு + யாது → நாக் + ~~உ~~இ + யாது → நாகியாது

**விளக்கம்**

அறுவகைக் குற்றியலுகரமும் நிலைமொழியாய் நிற்கும். அச்சொற்களின் முன்னர் யகரத்தை முதலாக உடைய வருமொழி வந்து புணரும். அப்போது நிலைமொழியில் உள்ள உகரம் இகரமாக மாறும். அந்த இகரம் 1 மாத்திரையாக ஒலிக்காமல் ½ மாத்திரையாக ஒலிக்கும். இரண்டு மொழிகள் புணர்வதால் உண்டாகும் இகரம் ஆதலால் இது புணர்மொழிக்கண் வரும் குற்றியலிகரம் ஆயிற்று. புணர்ச்சியில் உகரம் இகரமாகத் திரிவதைத் தொல்காப்பியர் யகரம் ... தோன்றாது (நூ.411) எனக் குறிப்பிடுகிறார். **(2)**

**தனிமொழிக் குற்றியலுகரம்**

36. **நெட்டெழுத்து இம்பரும் தொடர்மொழி ஈற்றும்**
**குற்றியல் உகரம் வல்ஆறு ஊர்ந்தே.**

**[இ-ள்]** க், ச், ட், த், ப், ற் என்னும் வல்லின எழுத்துக்களோடு உகரம் கூடி நின்று ஒலிப்பது குற்றியலுகரம் (கு, சு, டு, து, பு, று) ஆகும். அது நெட்டெழுத்தினை அடுத்தும் தொடர்மொழியின் இறுதியிலும் வெளிப்பட்டுத் தோன்றும். **[எ-டு]**

| | | |
|---|---|---|
| நெடிலை அடுத்த குற்றியலுகரம் | → | மாடு |
| வன்தொடர்க் குற்றியலுகரம் | → | தேக்கு |
| மென்தொடர்க் குற்றியலுகரம் | → | பஞ்சு |
| இடைத்தொடர்க் குற்றியலுகரம் | → | சால்பு |
| உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் | → | வரகு |
| ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் | → | எஃகு |

**விளக்கம்**

நெடில் முதலான ஆறும் தனிமொழிகள். எனவே இவற்றின் இறுதியில் வரும் உகரம் தனிமொழியில் வரும் குற்றியலுகரமாகும். இவ்ஆறுவகைக் குற்றியலுகரமும் ஈற்றயல் (கடைசி எழுத்திற்கு முன் உள்ள) எழுத்தை அடிப்படையாகக் கொண்டு பெயர்பெறும். **(3)**

**புணர்மொழிக் குற்றியலுகரம்**

37. **இடைப்படின் குறுகும் இடனுமார் உண்டே**
**கடப்பாடு அறிந்த புணரிய லான.**

**[இ-ள்]** குற்றியலுகரம் மேற்கூறப்பட்டதைப் போல் தனிமொழியிலும் வரும். அத்துடன் இரண்டு சொற்கள் புணருகின்ற இடத்தில் தோன்றி ஒலிப்பதும் உண்டு. அதன் புணர்ச்சி பற்றிய முறைமை குற்றியலுகரப் புணரியலில் (நூ. 409) கூறப்படும். **[எ-டு]**

செக்குக்கணை (செக்கினது தடி), சுக்குக்கோடு (சுக்கினது கிளை)

**விளக்கம்**

இரண்டு மொழிகள் புணரும் நிலையிலும் குற்றியலுகரம் தோன்றும். அவ்விடத்து உகரம் ½ மாத்திரை பெறும் என்பார் இளம்பூரணர். ஆனால் நச்சினார்க்கினியர் ½ மாத்திரையினும் குறுகி ஒலிக்கும் எனக் கூறுகிறார். இப்புணர்மொழிக் குற்றியலுகரம் மிகச் சில இடங்களில் மட்டுமே வெளிப்படும். நிலைமொழியின் ஈற்றில் 'க்கு' நின்று வருமொழியில் ககர வருக்க முதன்மொழி வந்தால் மட்டுமே இவ்உகரம் குறைந்து ஒலிக்கும் என்பது குறிப்பிடத் தக்கதாகும். **(4)**

**தனிமொழியில் வரும் ஆய்தம்**

**38. குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி**
**உயிரோடு புணர்ந்தவல் ஆறன் மிசைத்தே.**

**[இ-ள்]** புள்ளி வடிவினை உடையது ஆய்த எழுத்து. அது குற்றெழுத்தினை அடுத்தும் உகர உயிரோடு கூடிய வல்லெழுத்து (கு, சு, டு, து, பு, று) ஆறன் மேலதாயும் (முன்னரும்) வரும். **[எ-டு]**

எஃகு (கூர்மை), கஃசு (கால்பலம்), கஃடு(...), அஃது (சுட்டுப்பெயர்), கஃபு (...), கஃறு (ஒருவகை நிறம்).

**விளக்கம்**

குற்றெழுத்துக்கும் குற்றியலுகர எழுத்துக்கும் இடையில் ஆய்தம் வரும் என்பது இதன் கருத்தாகும். ஒருமொழிக்கண் வருதலால் இது தனிமொழியில் வரும் ஆய்தமாயிற்று. **(5)**

**புணர்மொழியில் வரும் ஆய்தம்**

**39. ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும்.**

**[இ-ள்]** நிலைமொழி, வருமொழிகளாய்ச் சொற்கள் புணருகின்ற இடத்தும் ஆய்த ஒலி தோன்றும். **[எ-டு]**

கல் + தீது → கஃறீது (லகரம் ஆய்தமாயிற்று)

**விளக்கம்**

இருமொழிகள் புணரும்போது நிலைமொழியின் ஈற்றெழுத்து ஆய்தமாகத் திரிவதால் இது புணர்மொழி ஆய்தமாயிற்று. தனிமொழியில் ஆய்தம் இரண்டு எழுத்துக்களின் நடுவில் மட்டுமே வரும். **[எ-டு]** எஃகு

புணர்மொழியில் ஆய்தம் குற்றெழுத்தை அடுத்துப் பல எழுத்துக்களுக்கு இடையில் வரும். **[எ-டு]**

அஃகடிய, பஃறுளி, பஃறாழிசை, முஃடீது. **(6)**

**ஆய்தம் முழுமையாக ஒலிக்கும் இடங்கள்**

**40. உருவினும் இசையினும் அருகித் தோன்றும்**
**மொழிக்குறிப்பு எல்லாம் எழுத்தின் இயலா**
**ஆய்தம் அஃகாக் காலை யான.**

**[இ-ள்]** அரை மாத்திரை அளவினதாக ஒலிப்பது ஆய்தம். அது நிறத்தின் மிகுதியையும் ஓசையின் மிகுதியையும் குறிக்கின்ற போது தனக்குரிய ½ மாத்திரையினும் மிகுந்து ஒலிக்கும். அவ்விடத்தில் மாத்திரையின் மிகுதியை வெளிப்படுத்துவதற்காக ஆய்தம் ஒற்றளபெடை போல இரட்டித்து எழுதப்பெறாது. **[எ-டு]**

கஃறென்னும் கல்லதர் அத்தம்
சுஃறென்னும் தண்டோட்டுப் பெண்ணை

உரு, இசை ஆகியவற்றின் மிகுதியைக் காட்ட ஆய்தம் ஒற்றளபெடை போல இரட்டித்து எழுதப்பெறும். இதுவே தொல்காப்பியரின் செய்யுளியல் விதியோடு மாறுபடாததாய் விளங்கும் என்பது நச்சினார்க்கினியர் கருத்து. **[எ-டு]**

கஃஃறென்னும் கல்லதர் அத்தம்
சுஃஃறென்னும் தண்டோட்டுப் பெண்ணை

(கஃறு → நிறக்குறிப்பு; சுஃறு → ஒலிக்குறிப்பு) (7)

**நெட்டெழுத்துக்கள் அளபெடுக்கும் முறை**

**41. குன்றிசை மொழிவயின் நின்றுஇசை நிறைக்கும்**
**நெட்டெழுத்து இம்பர் ஒத்தகுற் றெழுத்தே.**

**[இ-ள்]** செய்யுளில் வரும் சொற்கள் சில இடங்களில் அச்செய்யுளுக்குரிய ஓசையிலிருந்து குறைந்து ஒலிக்கும். அப்போது நெட்டெழுத்துக்கள் தத்தமக்குரிய இனமொத்த குற்றெழுத்துக்களை அருகில் பெற்று அவ்வோசையை நிறைவு செய்யும். **[எ-டு]**

தனி நெடில் → ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ
உயிர்மெய் நெடில் → பெறாஅர், குரீஇ, தூஉம், பேஎய், போஒய்
(8)

**ஐ, ஔ அளபெடுக்கும் முறை**

**42. ஐ[1] ஔ[2] என்னும் ஆஈர் எழுத்திற்கு**
**இகர[1] உகரம்[2] இசைநிறைவு ஆகும்.**

**[இ-ள்]** 1.ஐ 2:ஔ என்னும் இரண்டும் தமக்கென இன எழுத்துக்களைப் பெறாத நெட்டெழுத்துக்களாகும். அவற்றுள் ஐகாரத்திற்கு 1.இகரமும் ஔகாரத்திற்கு 2.உகரமும் இன எழுத்துக்களாக நின்று ஓசையை நிறைவு செய்யும். **[எ-டு]** உரனசைஇ, ஔஉ இனிச்சாலும். (9)

## ஓரெழுத்து ஒருமொழி

**43. நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி.**

[இ-ள்] ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் நெட்டெழுத்துக்கள் ஏழும் தனித்து நின்று பொருள் தரும். எனவே அவை ஓரெழுத்து ஒரு மொழிகளாகும். [எ-டு]

ஆ (பசு), ஈ ( ஓர் உயிர்), ஊ (தசை), ஏ (அம்பு), ஐ (தலைவன்) ஓ (மதகுநீர் தாங்கும் பலகை), ஔ (பூமி). (10)

## குற்றெழுத்தின் தன்மை

**44. குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே.**

[இ-ள்] அ, இ, உ, எ, ஒ என்னும் குற்றெழுத்துக்கள் ஐந்தும் தனித்து நின்று பொருள் தருவதில்லை. எனவே அவை மொழி என்னும் தன்மை பெறாமல் நிற்கும்.

### விளக்கம்

சில எழுத்துக்கள் மட்டும் உயிர்மெய்க் குறிலாக நின்று பொருள் தரும். [எ-டு]

து (உண்); நொ (துன்பப்படு). (11)

## மூவகை மொழிகள்

**45. ஓர்எழுத்து ஒருமொழி[1] ஈர்எழுத்து ஒருமொழி[2]**
**இரண்டுஇறந்து இசைக்கும் தொடர்மொழி[3] உளப்பட**
**மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.**

[இ-ள்] உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் தோன்றும் சொற்கள் பல. அவை அனைத்தும் 1.ஓரெழுத்தால் ஆகும் ஒருமொழி 2.இரண்டெழுத்தால் ஆகும் ஒருமொழி 3.இரண்டுக்கு மேற்பட்ட பல எழுத்துக்களைக் கொண்டு அமையும் தொடர்மொழி என மூன்றாக மட்டும் பாகுபடுத்தப்படும். [எ-டு]

ஆ, ஈ → ஓரெழுத்து ஒருமொழி
கல், மண் → ஈரெழுத்து ஒருமொழி
மயில், திங்கள், வள்ளுவர் → தொடர்மொழி (12)

## மெய்யெழுத்துக்கள் இயங்கும் முறை

**46. மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்.**

[இ-ள்] மெய்யெழுத்துக்கள் அனைத்தும் அகரத்தோடு கூடி நின்றே இயங்கும் தன்மையைப் பெறும். [எ-டு]

ட ற ல ள (நூ.23); கசட தபற (நூ.19).

**விளக்கம்**

உயிரொடு சேர்ந்தே மெய்க்கு ஒலி வடிவிலும் வரிவடிவிலும் இயக்கம் உண்டு. க், ங் போன்றவற்றைக் க, ங என ஒலிப்பர். க் முதலானவற்றை எழுதும் போது க என எழுதிய பின்னரே புள்ளி இடுவர். **(13)**

**மெய்ம்மயக்கத்திற்குப் புறனடை**

47. **தம்இயல் கிளப்பின் எல்லா எழுத்தும்**
**மெய்ந்நிலை மயக்கம் மானம் இல்லை.**

**[இ-ள்]** எழுத்துக்கள் மொழி இடையில் வரும்போது மெய்ம்மயக்கத்தில் கூறப்பட்ட விதிகளுக்கு ஏற்ப வர வேண்டும். ஆயினும் ஓர் எழுத்தின் வடிவ (பெயர்) இயல்பைச் சொல்லும்போது அம்மெய்ம்மயக்க நெறியிலிருந்து மாறியும் வரும். அது குற்றமாகாது.
**[எ-டு]**

லள ஃகான் (நூ.24) ணன ஃகான் (நூ.26). இவை முற்கூறிய மெய்ம்மயக்க விதிகளுக்கு மாறாக **ல்ள்** எனவும் **ண்ன்** எனவும் கூடி நின்றன. எழுத்துக்களின் பெயர்களைக் கூறியதால் இவை குற்றமற்றதாய்க் கொள்ளப்பட்டன.

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் பதினெட்டு மெய் எழுத்துக்களோடும் கூடி உயிர்மெய்யாக ஒலிக்கும். அவ்விடத்து உயிரெழுத்துத் தன் தன்மை இழந்து வல்லினம், மெல்லினம், இடையினம் என மெய்யெழுத்தின் இயல்பாய்ச் சுட்டப்பெறும். அவ்வாறு கூறுவது குற்றம் ஆகாது என நச்சினார்க்கினியர் இந்நூற்பாவிற்கு விளக்கம் கூறுகிறார். **(14)**

**இரண்டு மெய்யெழுத்துக்கள் சேர்ந்து நிற்றல்**

48. **ய[1]ர[2]ழ[3] என்னும் மூன்றுமுன் ஒற்றக்**
**கசதப ஙஞநம ஈர்ஒற்று ஆகும்.**

**[இ-ள்]** சொற்களின் இடையில் 1.ய் 2.ர் 3.ழ் என்னும் மூன்று மெய்யெழுத்துக்களுள் ஒன்று முன் நிற்கும். அதனை அடுத்து க், ச், த், ப், ங், ஞ், ந், ம் என்னும் எட்டு மெய்யெழுத்துக்களுள் ஒன்று வந்து இரண்டு ஒற்றுக்களாய் நிற்கும். (இவற்றை **ஈரொற்று உடனிலை** என்று கூறுவர்). **[எ-டு]**

ய் → காய்க்கும், காய்ச்சல், பொய்த்தல், வாய்ப்பு,
வேய்ங்குழல், தேய்ஞ்சது, சாய்ந்தது, மொய்ம்பு

ர் → பீர்க்கு, தேர்ச்சி, பார்த்தான், ஆர்ப்பு, கூர்ங்கல்,
நேர்ஞ்சிலை, உணர்ந்தான், நேர்ம்புறம்.

ழ் → வாழ்க்கை, வீழ்ச்சி, வாழ்த்தல், காழ்ப்பு, பாழ்ங்கிணறு, தாழ்ஞ்சினை, ஆழ்ந்தான், வீழ்ம்படை

**விளக்கம்**

மெய்ம்மயக்கத்தில் ஓர் ஒற்று வெளிப்பட்டும் மற்றோர் ஒற்று உயிர்மெய்யாகவும் நிற்கும் நிலை கூறப்பட்டது. இந்நூற்பாவின் படி இரண்டு ஒற்றுக்கள் வெளிப்பட்டும் அவற்றை அடுத்து மற்றோர் ஒற்று உயிர்மெய்யாகவும் நிற்கிறது. **(15)**

## தனிக்குறிலை அடுத்து ஒற்றாகாத மெய்கள் (ர, ழ)

**49. அவற்றுள்**
**ரகார ழகாரம் குற்றொற்று ஆகா.**

**[இ-ள்]** மேற்கூறப்பட்ட ய், ர், ழ் என்னும் மெய்யெழுத்துக்கள் மூன்றனுள் ரகாரமும் ழகாரமும் குற்றெழுத்தினை அடுத்து ஒற்றாக வருவதில்லை. (நெடிலை அடுத்து ஒற்றாக வரும். குறில் வந்தால் அதனை அடுத்து உயிர்மெய்யாகவே வரும்.) **[எ-டு]**

தார், பார் → நெடிலை அடுத்து ரகாரம் வந்தது
சூழ், வாழ் → நெடிலை அடுத்து ழகாரம் வந்தது
கரு, மழு → ரு, ழு என்னும் இரண்டும் குறிலை அடுத்து உயிர்மெய்யாய் நின்றன.

தற்காலத்திலும் சர், புர், டர் போன்ற ஒலிக்குறிப்புச் சொற்களில் மட்டுமே குறிலை அடுத்து ரகரம் வருகிறது. **(16)**

## தொடர்மொழியில் ரகார, ழகாரம்

**50. குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்**
**தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத்து இயல.**

**[இ-ள்]** உயிரெழுத்திற்குக் குறில், நெடில் என்னும் இயல்புகள் மாத்திரை அளவினால் கொள்ளப்படுகின்றன. அதனால் குறிலிணையை அடுத்து வரும் தொடர்மொழிகளில் இடம்பெறும் ரகார, ழகாரங்கள் நெடிலை அடுத்து நின்ற ரகார, ழகாரங்களாகக் கொள்ளப்பெறும். **[எ-டு]** அகர், புகர்; அகழ், புகழ் **(17)**

## செய்யுளில் னகரமும், மகரமும் ஈரொற்றாதல்

**51. செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்**
**னகார மகாரம் ஈர்ஒற்று ஆகும்.**

**[இ-ள்]** செய்யுளின் இறுதியில் போலும் என்னும் சொல் வருவதுண்டு. அச்சொல்லில் உள்ள லகர உகரம் (லு) னகர ஒற்றாய்த் (ன்) திரியும்.

அப்போது னகரமும் மகரமும் ஒற்றாக இணைந்து (ஈரொற்று உடனிலையாய்) நிற்கும். [எ-டு]

கூவிளம் பூத்தது போன்ம்
திசையறி மீகானும் போன்ம்

**விளக்கம்**

நச்சினார்க்கினியர் இப்போலும் என்னும் சொல்லைச் செய்யுட்போலி எனக் குறிப்பிடுகின்றார். இது செய்யுளில் இடையிலும் வரும். ஈற்றிலும் வரும். இடையில் வரின் பெயரெச்சம் என்றும் ஈற்றில் வரின் முற்று என்றும் குறிக்கப்பெறும். [எ-டு]

கண் **போன்ம்** காதலி → பெயரெச்சம்
கொள்வானும் **போன்ம்** → வினைமுற்று

போலும் - போன்ம் என்னும் சொல் செய்யுளின் இறுதியில் மட்டுமே வரும் என்பது இளம்பூரணர் கருத்து. ஆனால் நச்சினார்க்கினியரோ அச்சொல் இடையிலும் ஈற்றிலும் வரும் என்று சான்று காட்டுகிறார். **(18)**

**மகரக் குறுக்கத்திற்குப் புறனடை**

**52. னகாரை முன்னர் மகாரம் குறுகும்.**

[இ-ள்] மேற்கூறப்பட்ட னகரத்தின் முன் வந்த மகரம் தன் ½ மாத்திரையிலிருந்து குறுகும். (அதாவது ¼ மாத்திரையாய்க் குறைந்து ஒலிக்கும்). [எ-டு]

போலும் → போன்ம் } ¼ மாத்திரை
மருளும் → மருண்ம் } (மகரக்குறுக்கம்)

ணகரத்தின் முன்னரும் மகரம் குறுகும். **(19)**

**எழுத்துக்களின் மாத்திரை இயல்பு**

**53. மொழிப்படுத்து இசைப்பினும்[1] தெரிந்துவேறு இசைப்பினும்[2] எழுத்தியல் திரியா என்மனார் புலவர்.**

[இ-ள்] 1. எழுத்துக்கள் பலவற்றைச் சேர்த்து மொழியாக்கிக் கூறுதல் 2.அவ்வெழுத்துக்களைப் பிரித்துத் தனித்தனியாக ஒலித்தல் ஆகிய இரண்டு நிலைகள் உள்ளன. அவ்விரு நிலைகளிலும் எழுத்துக்கள் தத்தமக்குரிய மாத்திரை அளவிலிருந்து மாறுபடாமல் ஒலிக்கும் என்று சொல்லுவர் புலவர். [எ-டு]

அம்மா, அ; ஆண்டு, ஆ.

**விளக்கம்**

அம்மா என்று தொடர்மொழியாய் நின்றும் அ எனத் தனித்து நின்றும் அகரம் 1 மாத்திரை அளவையே பெற்றது. ஆண்டு எனத் தொடர்மொழியாய் நின்றும் ஆ எனத் தனித்து நின்றும் ஆகாரம் 2 மாத்திரை அளவையே பெற்றது.

மெய்யெழுத்தும் குற்றியலுகரமும் ½ மாத்திரை பெறுவன. அவற்றைச் சொல்லாக வைத்துச் சொல்லினும் செய்யுளில் வைத்து ஆராய்ந்தாலும் ½ மாத்திரை பெறும் என்னும் எழுத்தாம் தன்மையிலிருந்து திரியாது என்று இந்நூற்பாவிற்கு விளக்கம் தருகிறார் நச்சினார்க்கினியர்.

தமிழ் எழுத்துக்கள் தனித்து ஒலிக்கும் போதும் சொல்லில் இடம்பெறும் போதும் மாத்திரை அளவு மாறாமல் ஒரே தன்மையாக ஒலிக்கும். அச்சிறப்பு ஈண்டு எடுத்துரைக்கப்படுகிறது. **(20)**

**ஐகாரப் போலி**

**54. அகர இகரம் ஐகாரம் ஆகும்.**

**[இ-ள்]** அகரத்தையும் இகரத்தையும் சேர்த்துச் சொல்ல அவை ஐகாரம் போல் ஒலிக்கும். **[எ-டு]**

ஐயர்; அஇயர். **(21)**

**ஒளகாரப் போலி**

**55. அகர உகரம் ஒளகாரம் ஆகும்.**

**[இ-ள்]** அகரத்தையும் உகரத்தையும் கூட்டி ஒலிக்க அவை ஒளகாரத்தைப் போல் ஒலிக்கும். **[எ-டு]**

ஒளவை ; அஉவை. **(22)**

**அய் - ஐ ஆதல்**

**56. அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
ஐ என் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.**

**[இ-ள்]** அகரத்தின் பின் யகரமாகிய மெய்யெழுத்து வந்தும் ஐகாரம் என்னும் நெட்டெழுத்தைப் போன்ற ஒலி வடிவினைப் பெறும். **[எ-டு]**

ஐவனம் - அய்வனம்

அகரத்தின் பின்னர் வகரமெய் (வ்) வந்தும் ஒளகாரம் போல் ஒலிக்கும். **[எ-டு]**

ஒளவையார் - அவ்வையார். **(23)**

### ஐகார, ஔகாரக் குறுக்கங்கள்

57. **ஓர்அளபு ஆகும் இடனுமார் உண்டே**
**தேருங் காலை மொழிவயி னான.**

[இ-ள்] மேற்கூறப்பட்ட ஐகார, ஔகாரங்கள் மொழிகளில் நிற்கும் போது சிறுபான்மை குறுகி ஒலிக்கும். ஆராயும் காலத்து இரண்டு மாத்திரையாய் ஒலிக்க வேண்டிய அவை ஒரு மாத்திரையாய் ஒலிக்கும். [எ-டு]

இடையன், குவளை ; ஔவை, கௌவை.

### விளக்கம்

ஐகாரம் மட்டும் மொழிகளில் குறுகும் என்பது இளம்பூரணர் கருத்து. ஆனால் நச்சினார்க்கினியர் ஐகாரம், ஔகாரம் என்னும் இரண்டும் மொழிகளில் குறுகி ஒலிக்கும் என்று கூறுகிறார். **(24)**

### இகர, யகரப் போலிகள்

58. **இகர யகரம் இறுதி விரவும்.**

[இ-ள்] ஒரு சொல்லின் இறுதியில் இகரம் நிற்க வேண்டிய இடத்திற்கு யகரமும் வரும். அதுபோல் யகரம் நிற்க வேண்டிய இடத்திற்கு இகரமும் வரும். [எ-டு]

நாய் → நாஇ } யகரத்திற்கு இகரம்
தாஇ → தாய் } இகரத்திற்கு யகரம் **(25)**

## மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் (22)

### மொழிக்கு முதலாகும் உயிர் எழுத்துக்கள் (12)

59. **பன்னீர் உயிரும் மொழிமுதல் ஆகும்.**

[இ-ள்] பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் மொழிக்கு முதலாக வரும். [எ-டு]

அணில், ஆடு, இலை, ஈக்கள், உரல், ஊசல், எறும்பு, ஏணி, ஐவர், ஒட்டகம், ஓடம், ஔவையார் **(26)**

### மெய்யெழுத்து மொழி முதல் வராது

60. **உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா.**

[இ-ள்] முற்கூறப்பட்ட உயிரெழுத்தும், மெய்யுடன் கூடிய உயிர்மெய் எழுத்தும் மொழிக்கு முதலில் வரும். இவையல்லாத தனி மெய்யெழுத்து மொழிக்கு முதலாக வருவதில்லை. **(27)**

**எல்லா உயிரொடும் மொழிமுதலாகும் மெய்கள் (கதநபம:5X12=60)**

61. **க[1] த[2] ந[3] ப[4] ம[5]எனும் ஆஐந்து எழுத்தும்**
**எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே.**

**[இ-ள்]** 1.க் 2.த் 3.ந் 4.ப் 5.ம் என்று சொல்லப்பட்ட தனிமெய்கள் ஐந்து. அவை பன்னிரண்டு உயிரெழுத்துக்களுடன் கூடி உயிர்மெய்யாய் மொழிக்கு முதலில் வரும். **[எ-டு]**

க் → கல்வி, காலை, கிளி, கீரி, குரங்கு, கூடை, கெண்டை, கேழல், கைதை, கொண்டல், கோடை, கௌவை (ஓசை)

த் → தந்தை, தாழை, திணை, தீமை, துணை,தூக்கம், தெற்கு, தேன், தையல்,தொன்மை,தோழன்,தௌவை (மூத்தவள்)

ந் → நண்டு, நாள், நிழல், நீர், நுண்மை, நூல், நெற்றி, நேர்மை, நைதல், நொடி, நோக்கு, நௌவி (மான்)

ப் → பனை,பால்,பின்,பீடு,புண்,பூவை,பெண்,பேதை, பையன், பொன், போர், பௌவம் (கடல்).

ம் → மண், மான், மின்னல், மீன், முள், மூளை, மெய், மேல், மைனா,மொட்டு,மோர்,மௌவல் (மல்லிகை) **(28)**

**சகரமெய் மொழி முதலாதல் (12 - 3 = 9)**

62. **சகரக் கிளவியும் அவற்றோர் அற்றே**
**அ[1]ஐ[2] ஔ[3]எனும் மூன்றுஅலங் கடையே.**

**[இ-ள்]** முற்கூறப்பட்ட ஐந்து மெய்யெழுத்துக்களைப் போலச் சகர மெய்யும் (ச்) உயிரெழுத்துக்களுடன் கூடி மொழிக்கு முதலாக வரும். எனினும் 1.அ 2.ஐ 3.ஔ என்னும் மூன்றும் அல்லாத எஞ்சிய ஒன்பது எழுத்துக்களுடன் கூடி மொழிக்கு முதலாகும். **[எ-டு]**

ச் → சால்பு, சிலை, சீர், சுரும்பு, சூழ்ச்சி, செய்தி, சேவல், சொல், சோலை.

**விளக்கம்**

ச, சை, சௌ என்னும் எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வாரா என்பது தொல்காப்பியர் கருத்து. ஆயினும் சங்க இலக்கியங்களிலும் திருக்குறளிலும் சகரத்தை முதலாகக் கொண்ட சொற்கள் பல காணப்படுகின்றன. **[எ-டு]**

சகடு, சட்டி, சமழ்ப்பு, சம்பு

**(29)**

வகரமெய் மொழி முதலாதல் (12 - 4 = 8)

63. **உ[1] ஊ[2] ஒ[3] ஓ[4] என்னும் நான்குஉயிர்**
**வ என் எழுத்தோடு வருதல் இல்லை.**

[இ-ள்] பன்னிரண்டு உயிர்களுள் 1.உ 2.ஊ 3.ஒ 4.ஓ என்னும் நான்குடன் சேர்ந்து வகரமெய் (வ்) மொழிக்கு முதலாக வருவதில்லை. ஏனைய எட்டு எழுத்துக்களுடன் மட்டுமே மொழிக்கு முதலாய் வரும். [எ-டு]

வ் → வலை, வாளி, விலை, வீடு, வெள்ளி, வேல், வைகறை, வெளவுதல் (கவர்தல்). (30)

ஞகரமெய் மொழி முதலாதல் (3 x 1 = 3)

64. **ஆ[1] எ[2] ஒ[3]**
**என்னும் மூஉயிர் ஞகாரத்து உரிய.**

[இ-ள்] ஞகரமெய் (ஞ்) 1.ஆ 2.எ 3.ஒ என்னும் மூன்று உயிரெழுத்துக்களோடு சேர்ந்து மொழிக்கு முதலாக வருவதற்கு உரியதாகும். [எ-டு]

ஞ் → ஞாலம் (உலகம்), ஞெகிழி (கொள்ளிக்கட்டை), ஞொள்கிற்று (இளைத்தது). (31)

யகரமெய் மொழி முதலாதல் (1 x 1 = 1)

65. **ஆவோடு அல்லது யகரம் முதலாது.**

[இ-ள்] யகர மெய் (ய்) ஆ என்னும் ஓர் எழுத்துடன் மட்டுமே கூடி மொழிக்கு முதலாகும். (பிற எழுத்துக்களோடு கூடி மொழிக்கு முதலாக வராது) [எ-டு]

ய் → யாடு, யாமம், யான், யார். (32)

மொழிமுதல் எழுத்துக்களுக்குப் புறனடை

66. **முதலா ஏன தம்பெயர் முதலும்.**

[இ-ள்] மொழிக்கு முதலாக வராதவை என வரையறுக்கப்பட்ட எழுத்துக்கள் உள்ளன. அவை தம்மைச் சுட்டுகின்ற போது மொழிக்கு முதலில் வரும். [எ-டு]

டப்பெரிது, ஙப்போல் வளை

ட், ங் என்பன மொழிக்கு முதலாகா. ஆயினும் தம்மைச் சுட்டியதால் அவை மொழிக்கு முதலாயின. (33)

### குற்றியலுகரம் மொழி முதலாதல் (1 x 1 = 1)

**67. குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்.**

**(இ-ள்)** முன்னிலை முறைப்பெயர்களுள் ஒன்று நுந்தை என்பதாகும். அப்பெயரின் முன்னுள்ள நகர மெய்யோடு குற்றியலுகரம் சேர்ந்து (ந் + உ) மொழிக்கு முதலாக வரும். **(எ-டு)**

நுந்தை (உன்னுடைய தந்தை) *(34)*

### குற்றியலுகரத்தை முற்றியலுகரமாக ஒலித்தல்

**68. முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅது
அப்பெயர் மருங்கின் நிலையிய லான.**

**(இ-ள்)** மேற்கூறிய நுந்தை என்னும் சொல்லின் முதலெழுத்து குற்றியலுகரமாகும். அதனை முற்றியலுகரமாக ஒலித்தாலும் பொருள் வேறுபடாது.

### விளக்கம்

இம்முறைப் பெயருக்கு மட்டுமே இந்நிலை பொருந்தி வரும். அன்றி நுங்கு, நுணா போன்ற நகர உகரப் (நு) பொருட் பெயர்களுக்குப் பொருந்தாது. *(35)*

## மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் (24)

### இறுதியில் வரும் உயிரெழுத்துக்கள் (12 - 1 = 11)

**69. உயிர்ஔ எஞ்சிய இறுதி ஆகும்.**

**(இ-ள்)** உயிரெழுத்துக்களுள் ஔகாரம் நீங்கலாக எஞ்சியவை பதினொன்று. அவை அனைத்தும் மொழிக்கு ஈறாய் வரும்.

நெட்டெழுத்துக்களுள் ஔ நீங்கிய ஆறும் ஓரெழுத்து ஒரு மொழிகளாகும். எனவே அவை மொழிக்கு முதலும் ஈறும் ஆயின. குற்றெழுத்துக்கள் ஐந்தும் அளபெடையில் ஈறாக வரும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ → ஓரெழுத்து ஒருமொழிகள்
ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ → குறில்கள் அளபெடையில் ஈறாய் அமைந்தன.

உயிர்மெய்யாய் வருமிடத்து விள, பலா, கிளி, தேனீ, ஆடு, கொண்மூ, வருமே, மழை, நொ, பொய்க்குமோ என உயிரெழுத்துக்கள் பத்தும் ஈறாக நின்றன. எகரம் உயிர்மெய்யாய் (கெ ... னெ என) இறுதியில் வராது. *(36)*

### ஒளகாரமும் மொழிக்கு இறுதியாதல் (12 - 1 = 11 + 1 = 12)

70. **கவவோடு இயையின் ஒளவும் ஆகும்.**

[இ-ள்] ஒளகாரம் தனி உயிராக நின்று இறுதியில் வராது. அது க், வ் என்னும் மெய்களோடு சேர்ந்து மொழிகளின் இறுதியில் வரும். [எ-டு]

கௌ (கவ்வுதல்), வௌ (பற்றுதல்) (37)

### எகரம் மெய்யொடு கூடி மொழிக்கு ஈறாவதில்லை

71. **எனை வரும்உயிர் மெய்ஈறு ஆகாது.**

[இ-ள்] 'எ' என்னும் எழுத்துத் தனி உயிராய் ஈறாகும். அன்றி மெய்யோடு சேர்ந்து உயிர்மெய்யாய் இறுதியில் வராது.

ஏஎ → அளபெடையில் தனி உயிராய் வந்தது.

கெ, ஙெ, செ, ஞெ என உயிர்மெய்யாய்ச் சொல்லின் இறுதியில் இடம் பெறுவது எங்கும் இல்லை. (38)

### நகர உயிர்மெய்க்குப் புறனடை

72. **ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே.**

[இ-ள்] எகரத்தைப் போல ஒகரமும் உயிர்மெய்யாய் மொழிக்கு ஈறாக வராது. ஆயினும் நகரமெய்யோடு கூடி (ந் + ஒ - நொ) ஓரெழுத்து ஒருமொழியாக வரும். [எ-டு]

நொ - துன்பப்படு

ஓஒ அளபெடையில் தனி உயிராய் மொழியிறுதியில் நின்றது. கொ, ஙொ, சொ, ஞொ என எழுத்துக்கள் மொழி இறுதியில் நிற்பதில்லை. (39)

### ஞகர உயிர்மெய்கள் மொழி ஈறாதல்

73. **ஏஒ எனும்உயிர் ஞகாரத்(து) இல்லை.**

[இ-ள்] ஞகர மெய் ஏகாரத்தோடும் ஓகாரத்தோடும் கூடி மொழி இறுதியில் வராது. [எ-டு] (40)

உரிஞ, உரிஞா, உரிஞி, உரிஞீ, உரிஞு, உரிஞூ, உரிஞை

### நகரம், வகரம் மொழி ஈறாதல்

74. **உஊ காரம் நவவொடு நவிலா.**

[இ-ள்] நகார, வகார மெய்கள் உ, ஊ என்னும் உயிரோடு கூடி மொழிக்கு ஈறாக வருவதில்லை. [எ-டு]

பொருந, பொருநா, நே, பொருநை, நொ.
வருவ, உவா, செவ்வி, வீ, வை, வெள.

நு, நூ, வு, வூ என்னும் நான்கு எழுத்துக்களும் இறுதியில் வருவதில்லை என்பது தொல்காப்பியர் கருத்து. ஆயினும் தரவு, செலவு போன்ற சொற்களையும் நகர ஈற்றுச் சொற்கள் உகரம் பெற்றுப்புணரும் (நூ.299) என்பதையும் அவரே குறிக்கின்றார். **(41)**

## 'சு' முற்றியலுகரமாய் ஈறாதல்

**75. உச்ச காரம் இருமொழிக்கு உரித்தே.**

**[இ-ள்]** சகரம், உகரத்தோடு கூடி (சு) இரண்டு சொற்களில் மட்டுமே முற்றியலுகரமாக ஒலிக்கும். **[எ-டு]**

உசு (புழு), முசு (குரங்கு)

## விளக்கம்

உச்சகாரம் → சகரத்தோடு கூடிய உகரம். இது 'சு' என்பதாகும். இவ்வெழுத்து குற்றியலுகரமாக வருமிடங்கள் பல. ஆயினும் முற்காலத்தில் முற்றியலுகரமாக இரண்டு இடங்களில் மட்டுமே வந்தது.

தற்காலத்தில் பசு, கொசு, சிசு, திசு என்னும் முற்றியலுகரச் சொற்கள் வழக்கில் உள்ளன. இவை அனைத்தும் வேற்றுமொழிச் சொற்களாகும். **(42)**

## 'பு' முற்றியலுகரமாய் ஈறாதல்

**76. உப்ப காரம் ஒன்றுஎன மொழிப
இருவயின் நிலையும் பொருட்டுஆ கும்மே.**

**[இ-ள்]** பகரம், உகரத்தோடு கூடி (பு) முற்றியலுகரமாகி ஒரு மொழியில் மட்டுமே ஈறாக வரும். அவ்விடத்துத் தன்வினைப் பொருளையும் தரும்; பிறவினைப் பொருளையும் தரும். **[எ-டு]**

தபு

## விளக்கம்

இத் தபு என்னும் சொல்லை மென்மையாகக் கூறினால் நீ சா எனத் தன்வினையாகும். வன்மையாகச் சொல்லப் பிறிதொன்றினைச் சாகச் செய் என்னும் பிறவினைப் பொருளைத் தரும். உப்பகாரம் → பகரத்தோடு கூடிய உகரம். இது முற்றியலுகரமாகும். **(43)**

மொழி இறுதி எழுத்துக்களுக்குப் புறனடை.

77. **எஞ்சிய எல்லாம் எஞ்சுதல் இலவே.**

[இ-ள்] மொழிக்கு ஈறாகாது என்று கூறப்பட்ட எழுத்துக்கள் பல. அவை அனைத்தும் தம் பெயரைக் கூறும் போது மட்டும் ஈறாக அமையும். [எ-டு]

ங நீக்கினார்
கெக் களைந்தார்

**விளக்கம்**

இத்தொடர்களில் ங, கெ என்பன மொழிக்கு இறுதியில் வராதவை. ஆயினும் அவ்வெழுத்துக்களைச் சுட்டிச் சொல்லும் போது இறுதியில் நின்றன. ங, கெ என்பன சொல்லின் இறுதிகள்.

(44)

**மொழிக்கு ஈறாகும் மெய்யெழுத்துக்கள் (11)**

78. **ஞ[1]ண[2]ந[3]ம[4] ன[5] ய[6]ர[7]ல[8] வ[9]ழ[10]ள[11] என்னும்
அப்பதி னொன்றே புள்ளி இறுதி.**

[இ-ள்] மெய்யெழுத்துக்கள் பதினெட்டனுள் ஞ், ண், ந், ம், ன் என்னும் ஐந்தும் மெல்லெழுத்துக்கள் ஆகும். ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் இடையெழுத்துக்கள் ஆகும். இப்பதினொரு மெய்யெழுத்துக்களும் மொழிக்கு ஈறாக வரும். [எ-டு]

உரிஞ், மண், பொருந், மரம், வான், தாய், தேர்,
கல், தெவ், வாழ், நாள்

**விளக்கம்**

க், ச், ட், த், ப், ற் என்னும் வல்லினம் ஆறும் ங் என்னும் மெல்லினம் ஒன்றும் ஆக ஏழ் எழுத்துக்கள் மொழிக்கு ஈறாவதில்லை என்பது இந்நூற்பா வழி வெளிப்படுகிறது. (45)

**நகரம் (ந்) ஈறாதல்**

79. **உச்ச காரமொடு நகாரம் சிவணும்.**

[இ-ள்] நகர மெய் (ந்) உச்சகாரத்தைப் (சு) போல இரண்டு மொழிகளில் மட்டுமே ஈறாகப் பொருந்தி வரும். [எ-டு]

பொருந் (வேடமிடல்), வெரிந் (முதுகு)

**விளக்கம்**

நகரம் இரு சொற்களில் ஈறாக வரும் என்பது இந்நூற்பாவின் கருத்து. ஆயினும் அவ்வாறு நேரடியாகக் கூறாமல் உச்சகார ஈற்றொடு (நூ.75) தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளது. (46)

**ஞகாரம் (ஞ்) ஈறாதல்**

**80. உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே**
**அப்பொருள் இரட்டாது இவணை யான.**

**[இ-ள்]** ஞகரமெய் (ஞ்) உப்பகாரத்தைப் (பு) போல ஒரு மொழியில மட்டும் இறுதியாக வரும். ஆனால் அவ்உப்பகாரத்தைப் போலத் தன்வினை, பிறவினை ஆகிய இரண்டு பொருள்களை உணர்த்தாது. ஒரு பொருளை மட்டுமே உணர்த்தும். **[எ-டு]**

உரிஞ் (உராய்தல்)

ஞகர மெய் (ஞ்) ஒரு சொல்லில் மட்டும் ஈறாக வரும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும். **(47)**

**வகரம் (வ்) ஈறாதல்**

**81. வகரக் கிளவி நான்மொழி ஈற்றது.**

**[இ-ள்]** வகர மெய் (வ்) நான்கு சொற்களில் மட்டும் இறுதியாக வரும். **[எ-டு]**

அவ், இவ், உவ் } சுட்டு

தெவ் → பகைவர் **(48)**

**மகரப் போலி ஏற்காத னகர ஈறுகள் (9)**

**82. மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த**
**னகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப**
**புகர்அறக் கிளந்த அஃறிணை மேன.**

**[இ-ள்]** குற்றம் நீங்கச் சொல்லப்பட்ட அஃறிணைப் பெயர்கள் பல. அவற்றுள் பெரும்பாலனவற்றின் ஈற்றில் னகரமும் மகரமும் விரவி வரும். ஆயினும் இவ்வாறு மயங்காத னகர ஈற்று அஃறிணைச் சொற்கள் ஒன்பதாகும். **[எ-டு]**

நிலம் → நிலன்
அறம் → அறன்
மறம் → மறன்
} இவை ம், ன் விரவி வந்த அஃறிணைச் சொற்கள்

மயங்காத னகர ஈற்றுச் சொற்கள் - 9

1.எகின் (அன்னம்) 2.செகின் (தோள்மேல்) 3.விழன் (அகலம்) 4.பயின் (அரக்கு) 5.குயின் (மேகம்) 6.அழன் (பிணம்) 7.புழன் (துளை) 8.கடான் (...) 9.வயான் (வழுவாமை). **(49)**